செ.வெ.எண்: 8 நாள்: 03.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்பு திட்டத்தின் கீழ் கடந்த 15 ஆண்டுகளில் 90 சதவீதம் பேர் முழுமையாக குணமடைந்துள்ளனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை டாக்டர்.முத்துலெட்சுமிரெட்டி நினைவு அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள மாவட்ட காசநோய் மையத்தில் உலக காசநோய் தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.08.2016) நடைபெற்றது.

இந்த உலக காசநோய் தின விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து, காசநோய் பற்றிய விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள், காசநோயிலிருந்து குணமடைந்த நபர்கள், காசநோய் மருத்துவ திட்டத்தில் சிறப்பாக பணிபுரிந்த மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் அரசு சார்பற்ற அலுவலர்கள், காசநோய் அறிகுறிகள் உள்ளோர்களை அதிகமான அளவில் மாவட்ட காசநோய் மருத்துவமனைக்கு அனுப்பிய தனியார் மருத்துவர்கள் போன்றவர்களுக்கு பரிசுகளை வழங்கியும் பேசியதாவது:

காசநோய் பற்றி பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 24ம் நாள் உலக காசநோய் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தமிழகஅரசின் உத்தரவின்படி நமது மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி நினைவு அரசு தலைமை மருத்துவமனையில் உலக காசநோய் தினவிழா கொண்டாடப்பட்டது.



காசநோய் என்பது ஒரு வீரியமான தொற்று நோயாகும். மைக்கோ பாக்டீரியம் டுபர்குளோசிஸ் என்ற பாக்டீரியா கிரிமி மூலம் பரவுகிறது. சளியில் கிரிமி உள்ள காசநோயாளி தும்மும் போதும், இருமும் போதும் வெளிவரக்கூடிய நீர்த்திவலைகளின் வழியாக காசநோய் காற்றின் மூலம் பரவுகிறது. இரண்டு வாரங்களுக்கு மேல் சளியுடன் கூடிய இருமல், மாலைநேரக்காய்ச்சல், பசியின்மை, எடை குறைதல், நெஞ்சுவலி, மூச்சிறைப்பு, சளியில் இரத்தம் வருதல் போன்ற அறிகுறிகள் இருந்தால் காசநோயாக இருக்கலாம். எனவே இந்த அறிகுறி உள்ள நபர்கள் உடனடியாக அருகாமையிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மருத்துவமனை, மாவட்ட காசநோய் மையம் சென்று இரண்டு முறை சளி பரிசோதனை செய்வது மிகவும் அவசியமாகும். ஒருவருக்கு காசநோய் உள்ளது என்பதை கண்டறிந்தவுடன் அவருக்கு 6 மாதங்கள் முதல் 8 மாதங்கள் வரை டாட்ஸ் முறைப்படி சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதாரநிலையங்கள் மற்றும் மாவட்ட காசநோய் மையத்திலும் காசநோய்க்கான பரிசோதனைகளும், சிகிச்சைகளும் முற்றிலும் இலவசமாக கிடைக்கிறது.

மேலும் இத்திட்டத்தில் நமது மாவட்டம் 3 காசநோய் பிரிவு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு இதன் கீழ் 21 சிறப்பு நுண்ணோக்கி மையங்கள், 77 சிகிச்சை மையங்கள் பங்கு கொண்டு நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சைகள் மேற்கொண்டு வருகிறது. தமிழகஅரசின் உத்தரவின்படி சிறப்பு மருத்துவ முகாம்கள் மாவட்டத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதுடன், அம்முகாமில் காசநோய் பற்றிய சிறப்பு கண்காட்சி, காசநோய்க்கான சளி பரிசோதனையும் மேற்கொண்டு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டு வருகிறது.

நமது மாவட்டத்தில் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்பு திட்டத்தில் 24.3.2001 முதல் 31.12.2015 முடிய காசநோய் அறிகுறி உள்ளோராக 179916 நபர்கள் கண்டறியப்பட்டு சளி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதில் 24354 காசநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர். கடந்த 15 ஆண்டுகளில் 10563 சளியில் கிருமி உள்ள புதிய காசநோயாளிகளில் சிகிச்சை மூலம் 9504 நபர்கள் சளியில் கிருமியற்றவர்களாக மாற்றப்பட்டனர். இது 90 சதவீதம் ஆகும். மேலும் 9504 நபர்கள் காசநோய்க்கான முழுமையான சிகிச்சை பெற்றவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் காசநோய் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கை காரணமாக அதிக நோயாளிகள் கண்டறியப்பட்டு

அவர்களை குணப்படுத்தியதோடு, தொற்றும் தன்மையை குறைத்து குணமாகுபவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி இறப்போர் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. எனவே "நாம் அனைவரும் ஒன்றுபடுவோம், காசநோயை முடிவுக்கு கொண்டு வருவோம்" என்ற குறிக்கோளை தாரக மந்திரமாக கொண்டு நமது மாவட்டத்திலிருந்து காசநோயை முற்றிலுமாக அகற்ற ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

..2..



முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாவட்ட காசநோய் மையத்தில் அதிநவீன காசநோய் கண்டறியும் ஆய்வு மையத்தினை திறந்து வைத்தார். மேலும் காசநோய் கண்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த காசநோய் பற்றிய விழிப்புணர்வு பதாகைகளையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.டி.பரிமளாதேவி, நகர்மன்றத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், இணை இயக்குநர் (மருத்துவம், ஊரகநலப்பணிகள் மற்றும் குடும்பநலம்) (பொ) மரு.எஸ்.சையதுமொய்தீன், துணை இயக்குநர்கள் மரு.எஸ்.ஆர்.சந்திரசேகர் (காசநோய்), மரு.எஸ்.சாமியப்பன் (தொழுநோய்), மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மரு.எஸ்.காமராஜ், இந்திய மருத்துவ சங்கத்தலைவர் மரு.கே.ஆர்.ராமநாதன் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**